காஞ்சி

ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை

குறை

கூறுவதா!

எம்மையா!!

காங்கிரசாட்சியைக் குறை கூறினால் கோபம் கொப்பளித்துக்கொண்டு வருகிறது—காமராஜருக்கு.

கெய்ரோன்

ஊழல் பற்றி

எத்தனையோ ஆண்டுகளாகப் பொறுப்புள்ளவர்கள் எடுத்துக் கூறியபோதெல்லாம்,

குறை கூறுவதா!

எம்மையா!!

என்றுதான் கோபத்துடன் பேசினார்கள் கோலேந்திகள்.

இப்போது,

கெய்ரோன்

ஊழல் பற்றி

ஊர் நாடெங்கும் சிரிப்பாய்ச் சிரிக்கிறது. உயர்ந்த இடம் சென்றுள்ளவர்கள் கோபம் கொள்கிறார்களே என்பதற்காக அந்த 'ஊழல்' பற்றிப் பேசுவதை, பொறுப்புள்ளவர்கள் நிறுத்திக்கொண்டிருந்து விட்டிருப்பார்களானால்,

தாஸ் கமிஷன்

ஏது?

ஊழல் விளக்க

அறிக்கை ஏது?

கெய்ரோன், பதவி

துறப்பது ஏது?

எதுவும் நடந்திருக்காது, இன்னும் பல கோடி ரூபாய் ஊழலாகி இருந்திருக்கும்.

ஊழலா! எம்மிடமா! எங்கே இருக்கிறது! ஏது ஊழல்!! என்று பேசிய பேச்செல்லாம் என்ன ஆயிற்று!

கெய்ரோன் ஊழலோடு கதை முடிந்துவிடவில்லை; பார்க்கப் போனால், கதை ஆரம்பமாகிறது என்று கூறலாம்.

காங்கிரஸ் மாநாடு நடத்த முன்வந்த வரவேற்புக் கமிட்டித் தலைவர், காடிவாலா எனும் காங்கிரஸ் தலைவர், இரும்பு வளைவுகளையும் துத்தநாகத் தகடுகளையும் கள்ள மார்க்கட்டில் விற்றிருக்கிறார் என்பது உயர்நீதி மன்றத்தில் நடைபெற்ற ஒரு மானநஷ்ட வழக்கின்போது வெளியாயிற்று. அந்த 'உத்தமர்' காங்கிரசிலிருந்து ராஜினாமாச் செய்திருக்கிறார்.

ஊழல் நடத்திய அந்த உயர்ந்த தலைவர், முன்பு காங்கிரஸ் மாநாடு நடத்தியபோது, அமைச்சர்களும் அவர்தம் அடியார்களும் என்னென்ன பேசியிருந்திருப்பார்.

அற்புதம்! அற்புதம்!

ஊரெல்லாம்

வளைவுகள்!

கண்ணைப் பறிக்கும்

விளக்குகள்!

இரும்புக் கம்பிகளில்

கொடி! எத்தனை,

எத்தனை பார்!

தகடுகளே போட்டு

வேயப்பட்ட கூறை!

இவ்வாறெல்லாம் வியந்து பேசி இருப்பர்; காடிவாலாவைப் பாராட்டி இருப்பர்.

யாராவது, சந்தேகத்துடன் தலை அசைத்திருந்தால், அவன்மீது காய்ந்திருப்பர், பாய்ந்திருப்பர்.

இப்போதுதானே குட்டு வெளிப்பட்டிருக்கிறது.

காடிவாலா நடத்திய கள்ளமார்க்கட் பற்றி!

காங்கிரஸ் மாநாட்டில் காணப்பட்ட கோலாகலம் எதற்குப் பயன்பட்டது என்பது.

காடிவாலாவைக் குறை கூறியவர், என்ன ஆனார்? சொல்லொணாத கஷ்டம் தந்தனர். பல்லைக் கடித்துக் கொண்டு, பொழுது விடியும், உண்மை தெரியும் என்று அவர் இருந்ததன் விளைவு, இன்று நாடு கேட்டு மூர்ச்சையாகிறது, காங்கிரஸ் மாநாட்டுக் கோலாகலம் எதற்குப் பயன்பட்டது என்பதுபற்றி.

இது மத்தியப் பிரதேசத்தில் நடைபெற்ற மகோன்னதமான தேசீயத் திருப்பணி!!

ஒரிசாவில், ஊழல் நடந்திருக்கிறது என்று பட்டியல் தயாராகி, தரப்பட்டிருக்கிறது.

மைசூரில்கூட, ஊழல் நடைபெற்றிருப்பதாக ஒரு 'புகார்' கிளம்பி, மேலிடம்வரை சென்றுவிட்டிருக்கிறதாம்.

ஊழல்! ஊழல்! ஜீப் பேர ஊழல்! உர பேர ஊழல்! ரெடிமேட் வீடு கட்டுவதில் ஊழல்! தேக்கம் அமைத்ததில் ஊழல்!—என்று சொன்ன போதெல்லாம்,

ஊழலா?

எமது ஆட்சியிலா? என்று உரத்த குரலில் பேசினார்களே, அவர்களின் மிரட்டலுக்கு அஞ்சி, நமக்கேன் வீண் தொல்லை என்று பொறுப்புள்ளவர்கள் இருந்திருப்பார்களானால் இன்று

ஊழல் ஒழிப்பு

இயக்கத் தலைவராக

கெய்ரோன் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்திருப்பாரே!

இத்தனை ஊழல்களை வைத்துக் கொண்டே,

குறை கூறுவதா!

எம்மையா!!

என்றும் பேசுகிறார்கள்—கெம்பீரமாக, துணிச்சலுடன்!!



பாசஉணர்ச்சி

மலர் 1.] 9—8—64 [இதழ் 3

இயற்கை கொஞ்சிடும் இன்பத் திருநாட்டில், இல்லாமை கொட்டிட எங்கேனும் சென்று எப்பாடு பட்டேனும் பிழைத்திருப்போம் என்று, கண்ணீர் கொப்பளிக்க, கவலையைச் சுமந்துகொண்டு, கத்தும் கடல் கடந்து சென்று. இரத்தத்தை வியர்வையாக்கிச் சிந்தி, காடுகளைக் கழனிகளாக்கி, செல்வத்தைத் திரட்டிக் கொடுத்து, பர்மாவில் பன்னெடுங் காலமாய் வாழ்ந்து வந்து, இன்று, பர்மா சர்க்காரால், பதை பதைக்க விரட்டப்பட்டு, கையில் இருந்ததை, கடைகண்ணியில் இருந்ததை, மேலே போட்டிருந்த அணிகலனிலிருந்து சேர்த்து வைத்திருந்த சிறு இருப்புகள் வரையில் எல்லாவற்றையும், தட்டிக் கேட்டிட்ட பர்மா சர்க்காரிடம் கொட்டிக் கொடுத்துவிட்டு, இனி என்ன செய்வோம், எவர் நம்மைக் காப்பாற்றவல்லார், என்ற ஏக்கம் துளைத்திடும் மனதினராய், வாழ்க்கையைச் சுமை என்று எண்ணிடத்தக்க வறியராகி. தாயகம் செல்வோம், இறந்து படாதிருக்கத் தாயகம் ஒரு வழி காட்டாமலா போகும் என்ற நம்பிக்கையை ஒளிச்சிதறலாகக்கொண்டு, கொடுமை இருள் சூழ்ந்த வழியாகப் பயணம் நடாத்தி, செந்தமிழ் நாடு வந்துள்ள நொந்து கிடந்திடும் உடன்பிறப்புக்களே! வாட்டம் கொட்டிடும் நிலையிலே இங்குளோர் இருந்திடினும், எங்களைக் காட்டிலும் இன்னலுக்கு அதிக அளவில் ஆளாக்கப்பட்டு அல்லற்பட்டு விட்டு வந்துள்ள தமிழ் நாட்டினரே! வாருங்கள், ஒருவருக்கொருவர் துணையாக இருந்து, வாட்டத்தை ஓட்டிட முடியாது போயினும், சேர்ந்து துயரினைத் தாங்கிக் கொள்வோம், வாருங்கள்!

கடலிலே கலம் ஆடி அசைந்து வந்தபோது, உங்கள் நெஞ்சங்களிலே எத்தனை எத்தனையோ எண்ணங்கள் அலைமோதியிருக்கும். இவ்வளவு உழைத்தோமே, நம் உழைப்பால் பர்மா புதுப் பொலிவு கொண்டதே, தமிழகம் என் நாடு, தமிழ் என் தாய் மொழி என்ற பாச உணர்ச்சி தவிர மற்றத் தொடர்புகள் எதுவும் வேண்டாமென்று எண்ணி, நம்முடைய வாழ்வை பர்மாவுடன் மிக நெருக்கமாகப் பிணைத்துக் கொண்டு விட்டிருந்தோமே, இதுபோது, வேகமாகப் பாய்ந்து வந்து வல்லூறு கிள்ளையைக் கொத்திடுதல் போல, பர்மிய சர்க்காரின் நடவடிக்கை நம்மை நிலைகுலையச் செய்துவிட்டதே, பெருவெள்ளத்தால், நில நடுக்கத்தால், பெருந்தீயால் ஒரு நாடு நாசமாக்கப்பட்டு விட்டால், அந்த இடம் விட்டுப் பெயர்த்தெடுக்கப்பட்டு விடும் மக்கட் கூட்டம் போல, நாம் பர்மாவை விட்டுக் கிளம்பவேண்டி நேரிட்டுவிட்டதே. இவ்வளவு உழைத்தோம் இன்று விரட்டப்படுகிறோம் என்றஎண்ணத்தைத் தவிர வேறு எதனையும் நம்முடன் கொண்டு செல்ல இயலாத நிலையினராகி விட்டோமே, என் நாடு பொன்னாடு! அங்கு உண்டு எனக்கென்று ஒரு வீடு! என்று கூறத்தக்க விதத்தில் கூட நிலைமை இல்லையே, சொந்த நாட்டிலேயே ‘திக்கற்றவர்கள்’ என்ற முறையில் திரும்பிச் செல்கிறோமே, ஏனோ நமக்கிந்தக் கொடுமை, என்றெல்லாம் எண்ணி இருந்திருப்பீர்கள், மனம் புண்ணாகும் அளவு.

தமிழர்களே! தமிழகம் திரும்புகிறீர்கள்—அகதிகளாக!!

பாராண்ட இனம் எமது தமிழினம் என்று பாடல் இருக்கிறது—இன்றும். இங்கு ‘பராரி’களாகி வருகின்றீர்கள்.

உமது நிலை கண்டு உள்ளம் உருகாதார் இல்லை. ஆயினும் என்ன? கவலை கொள்ளற்க! சொத்திழந்தீர் சுகமிழந்தீர்; வேலை இழந்தீர் எனினும் என்ன! தாயகம் வந்துள்ளீர்—தாய் அரவணைப்பிலே, பட்ட கஷ்டமெல்லாம் மறந்திடுவீர்! உமக்கு இங்கு இடமா இல்லை! வீடா கிடைக்காது! தொழிலா அமையாது! உமக்காகத் தொழில் அமைத்திட, உமது மனப் புண் ஆறிடத்தக்க முறையில் வசதிகள் செய்தளித்திடத் தக்க ‘நிதி’யா இங்கு இல்லை! எங்கோ பாகிஸ்தானிலிருந்து வந்தவர்களுக்கும் புகலிடம், வாழ்விடம், தொழிலிடமாகத் தமிழகம் இருந்திட முன்வந்துளது. நீவிரோ அகதிகள் எனினும், தமிழர்! நொந்து கிடப்பவர்; உடன் பிறப்புகள்! பர்மா சர்க்கார் கண்டு வெட்கப்படட்டும்—வீடு இல்லை, தொழில் இல்லை, உடைமை இல்லை. என்றல்லவா கூறி உம்மை விரட்டிற்று அந்த சர்க்கார்—இதோ இங்கு நம்ம சர்க்கார் நடக்கிறது, உண்ண உணவு, போதுமான அளவு! உடுக்க உடை! இருக்க இடம்! செய்யத் தொழில்! வாழ வழி! அமைத்துக் கொடுத்திட திட்டம் தயாராகிவிட்டிருக்கிறது. குமுறிக் கிடந்திட வேண்டாம், புன்னகை மலரட்டும், புதுவாழ்வு தொடங்கட்டும்! வெளிநாட்டான் எமை வெளியேற்றி விட்டாலென்ன, எமக்கென்று ஒரு நாடா இல்லை! அந்த நாடு என்னபாலை வனமா, பனிக்காடா! அல்ல! அல்ல!

பழமுதிர்ச்சோலை! பாங்கு நிறை வயல்! பாக்கம் பட்டினம் கொண்டது! எழில் மிகு நாடு; அங்கு எமக்கு எதுவும் கிடைக்கும், எல்லாம் கிடைக்கும்! என்று பெருமிதத்துடன் கூறுங்கள், நல்லபடி வாழ்ந்திடுங்கள் என்று கூறிட மனம் துடிக்கிறது, உணர்ச்சி பொங்கி எழுகிறது, வார்த்தைகள் உருண்டோடி வருகின்றன-ஆனல்...! இங்குள்ள நமது சர்க்கார் உமக்கென்று உருப்படியான ஒரு திட்டத்தையும் தயாரிக்கவில்லையே, செலவினத்துக்கென்று ஒரு நிதி ஒதுக்கிக்கொள்ள வில்லையே, என்ன செய்வது! எதை நம்பி உமக்குத் இதமான வார்த்தைகளைக்கூறி, நம்பிக்கை ஊட்டுவது; உம்மை, இங்குள்ள நமது சர்க்கார், 'பர்மா அகதிகள்' என்றன்றே அழைக்கிறது! இந்த சர்க்கார் ஏதேதோ செய்திடும் என்று நம்பிக்கைகொண்டு உமக்குத் தைரியம் கூற இயலவில்லையே; தயக்கம் மேலிடுகிறதே, என் செய்வது! உடன்பிறப்பாளரே! உமது நிலைகண்டு, உம்மோடு சேர்ந்து உள்ளம் உருகி அழுதிடமட்டுமே முடிகிறது, அதற்கு அரசாங்க அனுமதி தேவை இல்லை என்பதால்! வேறு உமக்கென்று இன்னின்னது செய்து தரப்படும் என்று கூறிடும் நிலையில் இல்லையே — தமிழக துரைத்தனம் அதற்கான திட்டத்தை முறைப்படி தெரிவிக்கக் காணுமே.

கப்பலிலிருந்து இறங்குவர், காலை உணவு தரப்படும்.

கும்மிடிப்பூண்டியில் குடிசைகள் அமைக்கப்பட்டுள்ளன அங்கு சென்று தங்கலாம், சிலர் சாத்தனூர் முகாம் செல்லலாம். சில நாட்கள் சென்றதும், அவர்கள் அவரவர்கள் விரும்பும் மாவட்டங்கள் சென்றிடலாம்!—இதுதான் துரைத்தனம் கூறிடும் திட்டம்.

இது உமது இன்னலைத் துடைத்து, புது வாழ்வு தந்திடப் போதுமானதல்லவே. புரிகிறது, ஆனல் இதனை நாங்கள் எடுத்துக்கூறினலும் இங்கு உள்ள நமது சர்க்கார் பார்! பார்! அகதிகளைத் தூண்டிவிடுகிருர்கள் என்று பாய்வர், காய்வர்!

பர்மாவிலிருந்து திரும்பி வரும் தமிழர்களுக்குப் புது வாழ்வு சமைத்தளிக்க திட்டம் தேவை, பணம் மிகுதியும் தேவை, என்று வற்புறுத்தினேம், முன்கூட்டியே எடுத்துரைத்தோம், இப்போதென்ன அவசரம்? வரட்டும் பார்க்கலாம் என்றனர்!

அகதிகள் பிரச்சினைக்கென்று ஒரு 'துறை'யே வைத்திருக்கிறது மத்திய சர்க்கார் — கோடி கோடியாகச் செலவிடுகிறது — தண்டகாரண்யம் போன்ற புதுத் திட்டங்களை நடத்துகிறது—தாயகம் திரும்பும் தமிழர்களுக்கு, அதுபோல, தகுந்த அளவில் நிதி ஒதுக்கி, திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினேம். வாய்க்கு வந்ததை எல்லாம் பேசுவதா! அது அகதிகள் விஷயம், இது வேறு என்று கூறிவிட்டது தமிழக அரசு! நீங்கள் வந்துகொண்டிருக்கிறீர்கள் இங்கு துரைத்தனம் வழி ஏதும் வகுத்ததாகத் தெரியவில்லை.

பர்மாவிலிருந்து திரும்பும் தமிழர்களின் உடைமைகளையாவது பர்மா சர்க்காரிடம் பேசித் திரும்பப் பெற்றுத் தரவேண்டும் என்பதுபற்றியும் கூறினேம்; கேட்டுக்கொண்டது தமிழக அரசு; எமக்குத் தெரியும் என்று கூறிவிட்டது; அதற்காகவும் ஏதும் செய்ததாகத் தெரியவில்லை.

உழன்று உழன்று உருக்குலைந்துபோன நிலையில் வந்துள்ள உடன்பிறப்பாளர்களே! உமக்காகப் பரிந்து பேசிடும் எம்மிடம் ஆட்சி இல்லை; ஆட்சியில் உள்ளவர்களிடம், முறையிடுகிறேம், தீர்மானம் நிறைவேற்றி அனுப்புகிறேம்.

சின்னுட்களுக்கு முன்பு சேலத்தில் கூடிய தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியில், முன்பு நாங்கள் வலியுறுத்திக் காட்டியபடி, பர்மாவிலிருந்து திரும்பும் தமிழர்களுக்குப் புதுவாழ்வு அமைத்துக் கொடுக்க, மத்திய சர்க்கார் தாராளமாகவும் ஏராளமாகவும் தனியாக நிதி ஒதுக்கித் தரவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது,

ஒரு மகிழ்ச்சி அதைப் பார்த்ததும் — ஒருகணம். மறுகணமோ ஆட்சிப் பொறுப்பில் இல்லாத, தி. மு. க. போன்ற கட்சிகள், சர்க்கார் இதைச் செய்யவேண்டும் அதைச் செய்யவேண்டும் என்று தீர்மானம் போட்டு சர்க்காருக்குத் தெரிவிக்க வேண்டியது முறை, தேவை. ஆனல் ஆட்சிப் பொறுப்பிலே இன்று உள்ளதுதானே காங்கிரஸ் கட்சி—அந்தக் கட்சியே, அந்தக் கட்சியால் நடத்தப்படும் சர்க்காருக்கு முறையிட்டுக்கொள்ளத் தீர்மானம் போடவேண்டியது முறைதானு! அகில இந்தியக் காங்கிரசுக்கே தலைவர், காமராஜர்! அவர் ஒரு உத்திரவு போடவேண்டியதுதானே, மத்திய சர்க்காருக்கு. பர்மாவிலிருந்து திரும்பும் தமிழர்களுக்காக இந்தத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது இத்தனை கோடி செலவாகும், உடனே ஏற்பாடு செய்திடுக! என்று. அதை விட்டுவிட்டு, ஆட்சியில் இல்லாத கட்சிகளைப் போலவே, தீர்மானம் போடவேண்டுமா! யார், பார்த்திட! பர்மாவிலிருந்து வந்துள்ள தமிழர்களின் கண்களைத் துடைத்திடவா? ஏன் இந்த முறை என்று கேட்கத் தோன்றுகிறது.

என்றலும், இந்த அளவுக்காகிலும், இத்தனை வற்புறுத்தலுக்குப் பிறகு ஒரு ஆதரவுத் தீர்மானமாவது போட்டார்களே, அதுவேகூட மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சிதான். அது ஏட்டுச்சுரையா, கறிக்கு உதவத்தக்கதாகுமா என்பது இனித்தான் தெரிய வேண்டும்.

இன்று உள்ள நிலை, பர்மா சர்க்காரால் துரத்தப் பட்டு வந்துள்ளீர்கள், உங்களுக்குப் புதுவாழ்வு சமைத்தளித்திடும் செயலில், காலம் தாழ்த்தாது, கருத்தினைச் செலுத்தி செயல்பட தமிழக அரசு முனைந்திட வேண்டும் என்று மீண்டும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேம்.

உள்ளதை இழந்துவிட்டு தமிழகம் வந்துள்ள, உடன்பிறப்புகளே! உங்களின் கண்ணீரையும் பெருமூச்சையும், தமிழக அரசு உணர்ந்து உருப்படியான திட்டமிட்டுச் செயல்பட முனைதல் வேண்டும் என்பதற்காக எம்மாலான முயற்சிகளை மேற்கொள்வோம் என்ற உறுதி அளித்து, வாருங்கள்! தமிழ்நாட்டினரே! வாருங்கள்! என்று திராவிட முன்னேற்றக் கழகம் பாச உணர்ச்சி காரணமாகக் கூறிக்கொள்கிறது.

தம்பிக்கு — அவர்படும் அல்லல்!

தம்பி,

பைத்தியக்காரர்கள்!

பகற்கனவு காண்பவர்கள்!

பெரிய இடத்திலிருந்து நமக்குக் கிடைத்திருக்கும் 'பட்டங்கள்' இவை! எவ்வளவு உயரத்திலே தூக்கிக்கொண்டுபோய் என்னை உட்காரவைத்தாலும், எத்தனை பலமான குரலிலே பல்லாண்டு பாடினாலும், எத்தனை விதவிதமானவர்களைக் கொண்டுவந்து நிறுத்தி என் பல்லக்கைத் தூக்கச் சொன்னாலும், இந்தப் பாரதம் மட்டுமல்ல, பாரே புகழ்கிறது என்று பாமாலை சூட்டினாலும் என் எண்ணம் மட்டும் திரும்பத் திரும்பத் திரும்ப, 'அவர்கள்'பற்றியேதான் செல்கிறது, 'அவர்களை'ப்பற்றிப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே! 'அவர்களை'ப்பற்றிப் பேசினாலொழிய என் நா சுவை பெறுவதில்லை, நீங்கள் ஏதேதோ கேட்கிறீர்கள்,

லாவோஸ் பிரச்சினை என்கிறீர்கள்

காஷ்மீர் நிலைமை என்கிறீர்கள்

பாகிஸ்தான் நிலைமை என்கிறீர்கள்

ஏதேதோ கேட்கிறீர்கள், ஆனால் என் மனம் ஒரேஒரு விஷயத்திலேதான், நானே எவ்வளவு தடுத்துப் பார்த்தாலும் கட்டுப்படுத்த முயன்றாலும், திரும்பத் திரும்பச் சென்று தாவுகிறது — அந்தப் பயல்களைப்பற்றித்தான் எண்ணுகிறேன், எண்ணுகிறேன் எண்ணியபடி இருக்கிறேன், யாராரையோ எப்படி எப்படியோ மண்டியிடச் செய்துவிட்டேன், கூட்டாளிகளாக்கிக்கொண்டேன், ஆனால் இந்தப் பயல்களோ......!!

இவ்விதமான கவலைமிகு எண்ணம் கொண்டுள்ள காமராஜர் நமக்கு இந்தக் கிழமை வழங்கியுள்ள பட்டங்கள்,

பைத்தியக்காரர்கள்

பகற்கனவு் காண்பவர்கள்

என்பனவாகும்.

காமராஜர், அகில இந்தியக் காங்கிரசுக்குத் தலைவராகிவிட்டார், இனி அவருடைய நேரமும் நினைப்பும், 'அனைத்திந்திய, அதிதீவிர, அதிஅவசர'ப் பிரச்சினைகளிலேயே பாயும் பதியும், இணையும் பிணையும், மற்ற மற்ற சில்லறைகளைச் சின்னவர்களிடம் விட்டுவிடப் போகிறார்,



மக்களே ஒழுங்காக இருங்கள்!

மக்களே ஒன்றுபட்டு இருங்கள்!

மக்களே, உங்களை வாழ்த்துகிறேன்.

மக்களே உங்கள் வணக்கத்தை ஏற்றுக் கொள்கிறேன்.

நாடு முழுவதும் நன்றாக இருக்க வேண்டும்.

உலகம் முழுவதும் க்ஷேமமாக இருக்க வேண்டும்.

என்பன போன்ற உபதேசங்களை அருளியபடி இருந் திடப் போகிறார், அந்த உயர்ந்த நிலைக்கு அவர் சென்று விட்டார்!! — என்று காங்கிரஸ் வட்டாரத்தினர் பேசிக் கொண்டனர்.

தம்பி! நான்கூடக் கொஞ்சம் அந்தப் பேச்சைக் கேட்டு மயங்கினேன் — இப்போது தெரிகிறது, அவர் எத்தனை அடுக்குள்ள மாடி சென்றாலும், அரசோச்சி னாலும், அவருடைய கண்களுக்குத் தெரிவது, கண்களை உறுத்துவது, தி. மு. க.! என்ற பேருண்மை. அது அவ ருடைய இயல்பை அல்ல, தி. மு. க.வின் நிலையைக் காட்டுகிறது. எவர் எங்நிலை பெற்றிடினும், அவர் அரசி யலில், சந்தித்துத் தீரவேண்டிய சக்தி, சமாளித்தாக வேண்டிய பிரச்சினை, பதிலளித்துத் தீரவேண்டும் என்று கேட்டு நிற்கும் கேள்விக்குறி, தி.மு.க! ஆமாம், தம்பி! அதனால்தான், அவ்வளவு மேலான பதவிபெற்று, பராக்குக் கூறுவோர் படைபெற்று, 'சாந்து பொட்டு தளதளக்க சந்தனப்பொட்டு மணமணக்க' என்று சிந்து பாடுவார்களே அதுபோன்ற நிலையினைப்பெற்று, 'தர்பார்' நடத்தினாலும், அவருடைய நினைப்பு, நம்மைப் பற்றி அவருடைய பேச்சு நம்மைப்பற்றி! எங்கு சென்றா லும், எத்தனை உயர்வு பெற்றாலும், என்ன அதிகாரம் கிடைத்தாலும், எவ்விதமான அமுல் நடத்தினாலும், எவரெவர் வாழ்த்தினாலும், வழிபட்டு நின்றாலும், என்னை மறக்க இயலாது உம்மால்! எட்டி எட்டிச் சென்றாலும் உமது மனதைத் தொட்டிழுக்கும் நான் எழுப்பிடும் கேள்வி! என்று கூறுவதுபோல, நமது கழகம் காம ராஜரின் கருத்தைக் குடைந்தபடி இருக்கிறது. குடைச் சலே, தம்பி! மகா பொல்லாத நோய்! அதிலும் மனக் குடைச்சல் இருக்கிறதே, ஏ! அப்பா! தொல்லை நிரம்பி யது, துளைத்தெடுக்கும், படாத பாடுபடுத்திவிடும். அந்தக் குடைச்சல் காரணமாக அவர் நம்மை,

பைத்தியக்காரர்கள்

பகற்கனவு காண்பவர்கள்

என்று முச்சங்கத்தினரும் ஒருங்கே கூடிநின்று, தமிழ் மொழிக்கே அணியெனத்தகும் சொற்களாம் இவை தமைச் சொரிந்த வித்தகரே! வாழ்க! வாழ்க! வளர்க நும் செந்நாப் புலமை! என்று கூறிடுவர் என்று கொலு மண்டபத்துக் கோலேந்திகளும், குழலூதிகளும் கூறிக் குதூகலித்திடத்தக்க முறையில், நம்மை ஏசியிருக் கிறார்.

ஏசக்கேட்டால், அண்ணா! எறிச்சலல்லவா ஏற் படும்! நீ மகிழ்ச்சி காட்டுகிறாயே என்றுதானே தம்பி! கேட்கிறாய். கேட்கத்தான் செய்வாய்! ஒன்று மறந்து விடுகிறாயே, தம்பி! எத்தனைமுறை நினைவுபடுத்தினாலும், எனக்கு இத்தகைய பேச்சுகளைக் கேட்டு எறிச்சல் வரு வது இல்லையே!! ஏன் இப்படிப் பேசுகிறார்கள? எந்த நிலையில் இப்படிப் பேசுவார்கள்? என்று இந்தவிதமாக அல்லவா என் எண்ணம் செல்கிறது.

அவ்வளவுபெரியவர், அத்தனை மகத்தான நிலையில் இருந்துகொண்டு, 'கனம்கள், கைகட்டிநிற்க, கன வான்கள் வாய்பொத்திக்கிடக்க, கொலுவீற்றிருக்கும் நிலையில், நம்மைப்பற்றித்தான் நினைத்துக்கொண்டிருக் கிறார், நம்மைக் குறித்துத்தான் பேசமுற்படுகிறார் என் றால், நாம் தம்பி! அவருடைய கவனத்தை ஈர்க்கத்தக்க வல்லமையுடன் இருக்கிறோம் என்பது விளக்கமாகிற தல்லவா!! என் மகிழ்ச்சிக்குக்காரணம் அது; பொறுத்த மானதா அல்லவா என்பதை எண்ணிப்பார்த்திடு, தம்பி! புரியும், உனக்கும் மகிழ்ச்சி பூத்திடும்.

இப்போதும் தம்பி! நாட்டிலே. பல கட்சிகள் உள் ளன, காங்கிரசை எதிர்த்திட. காமராஜரின் கவனம் அந்தக் கட்சிகளின்மீதா செல்கிறது! 'கம்யூனிஸ்டு கட்சி — அசல் — விலைவாசி உயர்வைக் கண்டிக்க போராட்டம் — போர் ஆட்டம் அல்ல—நடத்தப்போவ தாக அறிவித்திருக்கிறது! ஒரு வார்த்தை அதுபற்றி! உஹும்!! (இதுவரையில்) நினைப்பு வந்தால்தானே. சம் யுக்த சோஷியலிஸ்டுகட்சி (பழய பிரஜாசோஷியலிஸ்டு கட்சி) கிளர்ச்சி நடத்தியிருக்கிறது. ஒரு பேச்சு அது பற்றி? கிடையாது! மேடை ஏறினால் "மன்னாதிமன்னா!" என்று பாடிடுவோர் புடைசூழ்ந்திருக்கும் வேளையில், காமராஜர் பேசும்பொருள் என்ன? தி. மு. கழகம்பற்றி!! அவ்வளவு வேலைசெய்கிறது, அந்த நினைப்பு!

சிற்றரசர்கள் கப்பம் கட்டுகிறார்கள்! பட்டத்தரசி கள் புன்னகை புரிகிறார்கள்! ஆடலழகிகள் ஆடுகிறார் கள், குயிலிகள் பாடுகிறார்கள், இருந்தும், பட்டத்தரச னின் முகத்தில்மட்டும் மகிழ்ச்சி இல்லை; சோர்ந்து காணப்படுகிறான்; என்ன? என்ன? என்று ஆயிரம் கண்கள் கேட்கின்றன! ஒரே பெருமூச்சுதான் பதில்!! இந்நிலை என்றால், காரணம் என்ன? மன்னன், மணி மண்டபத்தில் காணும் காட்சி மகோன்னதமானது என்றாலும், அவனுக்கு மருத்துவம் பலப்பல நடாத்தியும் குமுட்டல் போகவில்லை என்றால், மன்னன் மனம், மணி மகுடம், சிங்காதனம், சிற்றரசர் பணிவு, சிங்காரிகளின் நெளிவு இவற்றிலா செல்லும்; கோலாகலம் இவ்வளவு இருந்து என்ன பலன், இந்தக் 'குமுட்டல் நோய்' என்னைவிட்டுப் போகவில்லையே என்று எண்ணுகிறான்: இது கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து, மருந்துக்குக் கட்டுப்படாமல் போய்விடுமானால்.........! அந்த மன்ன னுக்கு மலரிலே நெடியும், தேனிலே கசப்பும், தென்ற லிலே வெப்பமும் இருப்பதாக அல்லவா தோன்றும். மனம் படாதபாடுபடத்தான் செய்யும்.

அதுபோல, ஆயிரவர் ஆரத்தி எடுக்க, பல்லாயிரவர் பராக்குக்கூற, பட்டத்தரசரெனக் கொலு இருப்பினும், காமராஜரின் மனம் "என்ன எண்ணுகிறது? இத்தனை அலங்காரம், ஆடம்பரம், இருந்து என்ன பயன்? அந்தப் பயல்கள், பதினைந்திலிருந்து ஐம்பதாகிவிட்டார்களே! பிளவு, இனி அழிவு என்று கணக்கிட்டோம், வளர்ந்துவிட்டார்களே! சென்னை மாநகராட்சியை மறுபடியும் கைப்பற்றிவிட்டார்களே, பல நகராட்சிகளைக் கைப்பற்றி இருக்கிறார்களே! இதே பதவிதேடும் வேலையோடு இருந்து தொலைக்காமல், சளைக்காமல் அறப்போராட்டமும் நடத்தியபடி இருக்கிறார்களே! இவ்வளவுக்கும் இந்தப் பொதுமக்கள் ஆதரவு தருகிறார்களே! தலைகாய்ந்ததுகளெல்லாம் கூடிக்கொண்டு, நமது 'தர்பாரை' எதிர்க்கின்ற கொடுமையைக் காணவேண்டி இருக்கிறதே. இந்த இலட்சணத்தில், நாம் அளவுகடந்த செல்வாக்குப் பெற்ற அகில இந்தியத் தலைவராகிவிட்டோம், என்று புகழ்கிறார்கள், சே! சே! சே! என்ன இது! என்ன இது!—என்று எண்ணுகிறார்; ஒரு கசப்பு, குமுட்டல் ஏற்படுகிறது!!

பைத்யக்காரர்கள்

பகற்கனவு காண்பவர்கள்

என்று ஏசுகிறார்—மனக்கசப்பு காரணமாக, குமுட்டலின் விளைவாக.

குமுட்டல், தம்பி! கெட்ட வியாதி! உடற்கூறு அறிந்தவர்கள் அதன் இயல்புபற்றிக் கூறுகிறார்கள்.

இதைச் சாப்பிடுங்கள் குமுட்டல் போய்விடும்! தேனில் குழைத்துச் சாப்பிடுங்கள், கசப்புதெரியாது!! என்று பக்குவம் சொல்கிறார்கள்:

இங்கு நான் குறிப்பிட்டிருப்பது வாயில் ஏற்படும் குமுட்டல் அல்ல; மனதிலே ஏற்படும் குமுட்டல்!! இதற்கு மருந்து எளிதிலே கிடைக்காது.

நமது கழக வளர்ச்சி இந்த மனக் குமுட்டலை மூட்டிவிட்டிருக்கிறது—பலருக்கு! துரும்பாக இளைத்துப் போனவர்களும், மேனி கருத்துப் போனவர்களும், உண்டு, இதனால்.

இருப்பதை இழந்திட மனம் இல்லாத நிலையும், இருப்பது போய்விடுமோ என்ற பீதியும், அவன் பெற்று விடுவானோ இவன் பெற்று விடுவானோ என்ற அச்சமும், இது போய்விட்டால் என்ன செய்வது என்ற ஆயாசமும், அற்ப சொற்பமானவன், யோக்யதை அற்றவன் என்று நாம் யாரைக் கருதிக் கொண்டிருந்து வந்தோமோ அவர்கள் அல்லவா நல்ல நிலை பெற்று விடுவார்கள் போலத் தெரிகிறது என்ற எண்ணமும் ஏற்படும்போது. மனக் குமுட்டல் ஏற்படும்,

அந்தப் பயலா போகிறான் மோடாரில்'

ஆமாம், அவரேதான்!

அத்தனை பெரிய மோடாரிலா? எவன் இவனை ஏற்றிக்கொண்டு போகிறான்?

மோடாரே அவருடையதுதான்!

மோடார்......அவனுடையதா! படாடோபத்தைப் பாரேன்! பயல் எங்கே கடன் வாங்கி இந்தக் கார் வாங்கினான்?

அவர் ஏன் கடன் வாங்கப் போகிறார்! அவரே பலருக்குக் கடன் தருகிறார்.

இவனா! கடன் தருகிறானா? ஏது? இவனுக்கு ஏது இத்தனை பணம்?

இப்படிக் கேட்டுவிட்டு, மனக் குமுட்டல் கொள்பவர்களைக் காண்கிறோம்; ஊரில், சில இடத்தில். அந்த குமுட்டல்காரர். பிறகு தம்முடைய செவர்லேயில் ஏறிக் கொண்டு, கடற்கரை சென்றால் குளிர்ச்சியா காண முடியும்! நண்பரின் திருமணம் காணச் சென்று அங்கு சுந்தராம்பாள் அம்மையார், கேட்போரின் மனம் உருகும்படி வெண்ணீர் அணிந்ததென்ன? என்று பாடிடும் போது இவர் செவியில் என்ன விழும்? மோடார் இவனுக்கென்ன? என்ற வார்த்தைகள்!!

சாதாரண வாழ்க்கையில் உள்ளவர்களுக்கே ஏற்படக்கூடாது மனக் குமுட்டல்—அது நல்ல இயல்பு அல்ல—உள்ளதையும் உருக்குலையச் செய்துவிடும். அதிலும் அரசியல் வாழ்க்கையிலே துளியும் குமுட்டல் எற்பட்டு விடக்கூடாது — நல்ல நினைப்பே எழாது, நல்ல பேச்சேவராது.

திராவிட முன்னேற்றக் கழகம் வளருகிறது—மகிழ்ச்சியுடன் பெருமிதத்துடன் கூறுகிறோம்.

ஒரு கட்சியின் வளர்ச்சிக்கு எவை எவை துணை செய்யுமோ அந்த வசதிகளைப் பெற்றில்லாமலேயே, பொது மக்களின் அன்பு நிறை அரவணைப்பின் காரணமாகவே வளருகிறது.

இந்தக் கழகத்தை, எதிர்க்காதவர் இல்லை, எதிர்க்காத நாளில்லை.

இந்தக் கழகத்தின்மீது வீசப்பட்ட வசை மொழிகளைத் திரட்டினால், புராணங்களை விடப் பெரும் அளவு உள்ள பெரும் ஏடாக்கலாம்.

எனினும் கழகம் வளர்ந்து வருகிறது. வளர்ந்தால் என்ன! வளரக் கண்டு, மனக் குமுட்டல் ஏற்படுவானேன்!

காங்கிரஸ் கட்சியின் கொள்கைகளை திட்டங்களை கழகம் எதிர்க்கிறது என்பதாலா?

ஆம் என்றால், இதே செயலைச் செய்திடும் பல கட்சிகளின்மீது ஏற்படாத கோபம், கசப்பு, கழகத்தின் மீது ஏற்படக் காரணம்? மனக் குமுட்டல் அளவுக்கு நிலைமை முற்றிவிடக் காரணம்?

கழகம், வளருகிறது எதிர்ப்புக் கிடையில் என்பது மட்டுமல்ல, பரவலாக ஒரு எண்ணம், நாட்டுமக்களிடம் ஒரு பேச்சு எழுந்துவிட்டிருக்கிறது அடுத்த முறை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமையக்கூடும் என்பதாக.

காங்கிரசை எதிர்த்து நிற்கும் வேறு எந்தக் கட்சியையும் பற்றி இந்தப் பேச்சு எழவில்லை, தி. மு. கழகம் பற்றியே இந்தப் பேச்சு, பரவலாக எழுந்திருக்கிறது.

இது எதிர்க் கட்சி மட்டுமல்ல, ஆளுங் கட்சியாக வரக்கூடிய வகையில் வளரும் கட்சி என்ற எண்ணம், காங்கிரஸ் பெருந்தலைவர்களுக்கே ஏற்பட்டுவிட்டிருக்கிறது. அந்த எண்ணம் காரணமாகவே, மனக் குமுட்டல் ஏற்பட்டுவிட்டிருக்கிறது. அந்த குமுட்டலின் காரணமாகவே.

பைத்யக்காரர்கள்

பகற் கனவு காண்பவர்கள்

என்று ஏசிப் பேசியிருக்கிறார் அகில இந்திய காங்கிரசின் தலைவர்.

தம்பி! அடுத்த பொதுத் தேர்தலில் என்ன செய்ய வேண்டும் என்பதும், எத்தகைய ஆட்சி அமைய வேண்டும் என்பதும், பொதுமக்களின் கரத்தில் இருக்கிறது. இந்நாட்டின் மன்னர்கள், நாலை அவர்களின் விருப்பத்தின்படி ஒரு அரசு அமைத்துக் கொள்வார்கள். அந்த உரிமை அவர்களுக்கு.

அதுதான் ஜனநாயகம் எனப்படுவது. இந்நிலையில், தி. மு. கழகம் ஆட்சிக்கு வந்துவிடப் போகிறதாமே என்று மனக் குமுட்டல் கொள்வதால் என்ன பலன்! பொதுமக்கள் விரும்பி திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆட்சிப் பொறுப்பிலே அமர்த்துவார்களானல், அது எப்படி குறையுடையதாகும்! ஆட்சியை யாரிடம் ஒப்படைப்பது என்ற உரிமை படைத்தவர்களல்லவா பொதுமக்கள்! மனக் குமுட்டல் கொள்வது எதற்கு?

ஒருவர் பேசியிருக்கிறார் எண்ணி பத்து நாள் நடக்குமா, கழக ஆட்சி! என்று,

இன்னொருவர் ஒரு படி மேலே சென்று கூறுகிறார், "பத்தே நாளில், கழக ஆட்சியைக் கவிழ்த்துக் காட்டுவோம்'' என்று.

உயர்ந்த நிலையிலுள்ள ஒரு காங்கிரஸ் தலைவரிடம் நமது கழகத் தோழர் ஒருவர்பேசிக்கொண்டிருந்த போது, அந்த காங்கிரஸ் தலைவர் கூறினராம், நீங்கள் ஆட்சியைக் கைப்பற்றினலும், நாங்கள் நொடியில் அதைக் கவிழ்த்துவிடுவோம்'' என்பதாக.

இவை நடைபெறுகின்றன என்றே வைத்துக் கொள்வோம், — எல்லாம் பொதுமக்கள் அனுமதி கொடுத்தால்தானே!—யாருக்கு இதனல்நட்டம்? கழகத்துக்கா? இம்மி அளவும் இல்லை!! கழகம், பொதுமக்கள் விரும்பி, அதற்கு எந்த நிலையை அளித்தாலும், எந்தச் செயலைச் செய்திடப் பணித்தாலும், மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் பெற்றிருக்கிறது.

தம்பி! இந்தப் பேச்சுகளிலிருந்து நமக்கு. இப்போதிருந்தே, காங்கிரஸ் கட்சி தி. மு. க. ஆட்சிக்கு வந்தால் என்ன செய்வது என்பது குறித்து சிந்திக்கத் தொடங்கி யிருப்பதி லிருந்தே, காங்கிரசுக்கே ஒரு பலமான எண்ணம், கழகம் ஆளுங் கட்சியாகிவிடும் என்ற எண்ணம் வலுத்துக்கொண்டு வருகிறது என்பது புரிகிறதல்லவா!

அந்த எண்ணம் காரணமாகவே மனக்குமுட்டல்.

அதிகாரத்தைப் பெற்றவர்களுக்கு, அதை இழந்திட மனமும் வராது—இழந்துவிடச் செய்யும் ஆற்றல் எவருக்கும் இல்லை என்ற எண்ணமே தடித்து இருக்கும்.

ஆனல், அந்த எண்ணத்தைக் கண்டு, பொது மக்கள் தமது போக்கை மாற்றிக் கொள்ளவும் மாட்டார்கள், உரிமையை இழந்துவிடவும் மாட்டார்கள்.

கோபமில்லாத, பழைய காங்கிரஸ்காரர் யாரை யாவது பார்த்தால் இதைக் கேள், தம்பி! தி. மு. கழகம் ஆட்சிக்கு வந்தால் என்னய்யா என்று.

அவருக்கே கூடக் கொஞ்சம் சங்கடம் கலந்த கோபம் முதலில் கிளம்பும்—காங்கிரசின் சேவை பற்றி விளக்குவார்—மரியாதையுடன் அதைக் கேட்டுவிட்ட பிறகு—ஐயா! அந்தக் காங்கிரசா இப்போது இருக்கும் காங்கிரசு? என்று கேள்—சாந்தம் ஏற்படும்—பிறகு மறுபடியும் கேள், தி. மு. கழகம் ஆட்சிக்கு வந்தால் என்ன தவறு? ஏன் வரக்கூடாது? வரக்கூடாது என்று உங்கள் தலைவர்கள் சிலர் பேசுகிறார்களே அது ஏன்? மனக் குமுட்டல் கொள்கிறார்களே சரியா? என்று கேட்டுப் பார்.

நாட்டை ஆள நீயா! உனக்கா அந்த அந்தஸ்து!!

நீயார், உன் யோக்யதை என்ன? உன்னிடமா நாடு ஆளும் பொறுப்பை ஒப்புவிப்பார்கள்.

நாடு ஆள்வது சாதாரணகாரியமா! திறமை வேண்டாமா, தகுதிவேண்டாமா! உனக்கு ஏது அவை?

இப்படிப் பேசுவர்—பேசுகின்றனர்—சிலர். இவர்கள், நடைபெறுவது ஜனநாயகம் என்பதை மறந்துவிட்டுப் பேசுகிறார்கள்.

"காஞ்சி"

சந்தாவிகிதம்

ஆண்டு சந்தா	ரூ.	10—00
ஆறுமாத சந்தா	ரூ.	5—00

ஆறுமாத சந்தாவிற்குக் குறைந்து அனுப்புவதற்கில்லை.

உரிமையாளர்,
'காஞ்சி' அலுவலகம்,
சின்ன காஞ்சிபுரம்.

ஜனநாயகத்தில், நாடாளும் நிலை, பொதுமக்களின் ஆதரவைப்பொறுத்திருக்கிறது. பொது மக்கள்பார்த்து, ஒரு கட்சியை ஆட்சிப் பொறுப்பிலே இருந்திடச் சொன்னால், அந்த ஆணை ஒன்றே அந்தக்கட்சிக்கு, ஆட்சி நடாத்தும் தகுதி, திறமை, வலிமை யாவற்றையும் தன்னாலே பெற்றுத் தருகிறது!

மோடாரில் ஏறிக்கொள்பவன், குடல்தெறிக்க ஓடத்தேவையில்லை—உட்கார்ந்த நிலையிலுள்ள அவனை, மோடார் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடம் வேகமாக அழைத்துச்சென்று சேர்க்கிறது.

பொதுமக்களின் 'உத்திரவு' எனும் விசைதான், ஆட்சிப் பொறுப்பில் அமரும் எந்தக் கட்சிக்கும் தகுதி, திறமை, அளிக்கிறது. அந்த பொதுமக்களின் உத்திரவு கிடைத்து தி. மு. கழகம் ஆட்சிக்கு வருமானால், தவறு என்ன? என்று விளக்கமாகக் கேட்டுப்பார், தம்பி! நல்ல காங்கிரஸ்காரராக இருந்தால், பொது மக்கள் பார்த்து கழகத்துக்கு அந்த நிலையை உண்டாக்கினால், அந்தத் தீர்ப்பை ஒத்துக்கொள்ள வேண்டியது தான் என்று தெரிவிப்பார்.

இந்த "விடுவோமா?"க்காரர்களைப்பற்றிக் கவலை வேண்டாம்! பொதுமக்களின் 'ஆணை'க்கு முன்பு எந்த ஆர்ப்பரிப்பும் நில்லாது, நிலைக்காது.

இவ்வளவு தெளிவாக இது தெரியும்போது, மனக்குமுட்டல் ஏன் ஏற்படுகிறது என்கிருயா, தம்பி! காரணம் என்ன தெரியுமா? பெரிய நிலைக்குச் சென்றுவிட்டதும், தன்னாலே ஒரு எண்ணம், பலருக்கு வந்துவிடுகிறது — நம்மால்தான் முடியும் — நம்மால் மட்டுந்தான் முடியும்—நம்மாலன்றி வேறெவராலும் முடியாது—நம்மைவிட்டால் வேறு யார் இருக்கிருர்கள்!!—என்ற எண்ணம்.

இந்த எண்ணம், ஒருவிதமான எதேச்சாதிகார மனப்போக்கை வளரச் செய்துவிடும் — அதன் விளைவு — உலகிலேயே தன்னைவிடத் தகுதியும் திறமையும் படைத்தவர்கள் ஒருவரும் இல்லை என்ற நினைப்பு — அந்த நினைப்பு தடித்திட தடித்திட, வேறு எவரோ இருக்கிருர்களாம், தகுதியுடன் என்ற பேச்சு கேட்டதும் ஒரு ஏளனம், பிறகு கோபம், பிறகு திகைப்பு, திகில்! இறுதியில் கசப்பு, குமுட்டல்!! ஏற்பட்டுவிடுகிறது.

நாமே எதற்கும்! நாமே என்றென்றும்! நாமே எவரையும்விட! — என்ற மனப்போக்கு, அரசியலில், முறை எதுவாக இருப்பினும், சர்வாதிகாரத்தை மூட்டிவிடும்.

முடிமன்னனுமில்லை, படையுடையோன் ஆட்சியும் இல்லை, இது மக்கள் ஆட்சி என்று விருது கூறிய படியே, ஆட்சியில் அமர்ந்துவிட்ட கட்சி, 'ஒரே கட்சி' ஆட்சியை அமைத்து, இதுவே உண்மையான ஜனநாயகம் என்று பேசுவது அறிவாயல்லவா! எகிப்திலே நாசர்! மற்றவர்கள் பற்றி நினைவுபடுத்திக்கொள்வதா, சுடினம்.

ஏசண்டுத் தோழர்களுக்கு

மணியார்டர், செக், டிராப்ட், கடிதங்கள் அனுப்பும்போது உரிமையாளர் "காஞ்சி" அலுவலகம் சின்ன காஞ்சிபுரம் என்று குறிப்பிட்டு எழுதவும்.

உரிமையாளர்,
'காஞ்சி' அலுவலகம்,
சின்ன காஞ்சிபுரம்.

பத்து நாட்களுக்கு முன்பு, கெனியா நாட்டு முதலமைச்சராகியுள்ள; ஜோமோ கெனியாடா கூறிவிட்டார், கெனியாவில் ஒரே கட்சி ஆட்சி முறை ஏற்படுத்த எண்ணுகிறேன் என்று. கனு நாட்டில், என் க்ருமா! இவர்களுக்கெல்லாம் என்ன எண்ணம்?

நாமே சகல தகுதியும் திறமையும் பெற்றிருக்கிருேம்.

நம்மை விட்டால் வேறு எவரும் இல்லை.

இதே முறையில், காங்கிரஸ் தலைவர்களின் போக்கு செல்கிறது என்பதைக் காட்டுவதுதான்,

எதிர்க்கட்சி என்றாலே ஒரு எறிச்சல்

எதிர்க் கட்சி ஆட்சிக்கு வந்துவிடும் என்றாலே மனக் குமுட்டல்

ஏற்பட்டிருக்கும் இன்றைய நிலைமை.

தம்பி! நான் இதைக் கண்டுதான் வருத்தம் கொள்கிறேன்—காமராஜர் இரண்டு வார்த்தை நம்மை ஏசிவிடுவது பற்றி அல்ல.

ஜனநாயக சோஷியலிச வாரம் கொண்டாடிவிட்டு, எதிர்க் கட்சியாவது ஆட்சிக்கு வருவதாவது! பைத்யக்காரர்கள் பேசுகிருர்கள்! பகற் கனவு காணுகிருர்கள்! என்று ஏசுவது, ஜனநாயக முறையைப் புரிந்து கொள்ளாமலே, அதற்காக ஒரு விழா கொண்டாடிய கேலி நிரம்பிய குற்றமாகி விடுகிறது.

இவனுக்கென்ன யோக்யதை! அவனுக்கு என்ன தகுதி!—என்று ஒரு கட்சி மற்றோர் கட்சியைக் குறித்துக் கேலி பேசுவது முறையுமல்ல—அந்தப் பேச்சு பலனும் அளிக்காது. பொதுமக்கள், தேர்தலின் போது யோசிக்க வேண்டிய விஷயமது!

வேறு எவரும் ஆட்சிக்கு வரத் தேவையில்லாத முறையில், பொதுமக்கள் கொண்டாடத் தக்க விதத்தில், ஒரு குறையுமின்றி மக்களை, இன்று உள்ள ஆட்சி வைத்திருக்கிறதா—தகுதி திறமை குறித்து இவ்வளவு பேசுகிறதே என்று பார்த்தால்,

ஆண்டு பதினேழு ஆன பிறகும்,
இன்றும் முக்கியமான பிரச்சினையாக இருப்
பது சோற்றுப் பிரச்சினைதான்!

என்று காமராஜரே சொல்லுவதிலிருந்து, 17 ஆண்டுகளாக இந்த ஆட்சி நடந்தும், மக்கள் இன்னமும் சோற்றுக்கே திண்டாடுகிருர்கள் என்பது மெய்ப்பிக்கப்படுகிறது,

இந்த நிலையில் உள்ள ஒரு ஆட்சி, எம்மைத் தவிர ஆட்சி நடத்தும் தகுதியும் திறமையும் பெற்றவர்கள் யார்? என்று கேட்பது.

உற்பத்தி பெருகினலும் விலை குறையவில்லை,

உணவுப் பண்டங்களைப் பதுக்கி வைக்கும் கொடுமை ஒழிக்கப்படவில்லை.

வெளிநாட்டானிடம் 'சோறு' கேட்கும் பஞ்சநிலை போகவில்லை.

ஏறிக்கொண்டேபோகும் விலைகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

பேச்சுமட்டும் இருக்கிறது, "மூச்சுவிடாதே! முடி என் தலையில்! அது கீழே இறங்காது!!" என்று.

எந்தப் பிரச்சினையை இவர்கள், எவரும் கண்டு வியக்கத்தக்க முறையிலே தீர்த்துவிட்டார்கள், எம்மைக் காட்டிலும் தகுதிபடைத்தவனும் இருக்கிருஞ நாடு ஆள!!—என்று ஆர்ப்பரிக்க.

தம்பி! உண்மை இதுதான். 17-ஆண்டுகளாகியும், சோற்றுப் பிரச்சினையைக் கூடத் தீர்க்கமுடியாத ஒரு ஆட்சியை, மக்கள் எப்படி ஆதரிப்பார்கள்; அந்த மக்களிடம், கழகம்கொண்டுள்ளநேசத் தொடர்பு நாளுக்கு நாள் வளருகிறதே; எதிர்காலம் எப்படியோ என்ற எண்ணம் தோன்றுகிறது; தோன்றும்போது மனக்குமுட்டல் ஏற்படுகிறது; அதுதான் காரணம்,

பைத்யக்காரர்கள்

பகற்கனவு காண்பவர்

என்று நம்மை ஏசுவதற்கு.

இந்த முறையிலே, தம்பி! பார்த்திடுவாயானல், அந்த ஏசல்கேட்டு எரிச்சல் ஏற்படாது. நமது கழக வளர்ச்சிகண்டு, அதனைக் குலைத்திட எடுத்துக்கொண்ட முயற்சிகள் முறிந்துபோகக்கண்டு, மனக்குமுட்டல்கொண்டு, காங்கிரஸ் பெருந்தலைவர்கள் உள்ளனர் என்ற உண்மை புரியும்; புரிந்திடும்போது, மேலும் உற்சாகத்துடனும் நம்பிக்கையுடனும் பணியாற்றி கழகத்தை வலிவும் பொலிவும் மிகுந்ததாக்குவோம்; பொதுமக்கள் காணட்டும் நமது சீரிய பணிகளை! பொதுமக்களின் ஆணைகேட்டு நடந்திடுவோம்!! என்ற உறுதி பிறந்திடும்.

உணவு, உடை. குடியிருப்பிடம், எனும் மூன்று அடிப்படைத் தேவைகளைக்கூட 17 ஆண்டு ஆட்சிக்குப் பிறகும் நிறைவேற்றிக்கொடுத்திட இயலவில்லை காங்கிரஸ் கட்சியினல் என்பதைப் பொது மக்கள் பெரும் அளவு புரிந்துகொண்டுவிட்டிருக்கிருர்கள். புரியவைப்பவர்கள் இந்த கழகத்தாரல்லவா என்ற எண்ணம் ஏற்படும்போது மனக்குமட்டல் அதிகமாகிறது.

அதன் காரணமாக, நம்மைப் பைத்தியக்காரர்கள் பகற்கனவு காண்பவர்கள் என்று, காமராஜர் ஏசி இருக்கிருர்.

நல்லவர்!

பொல்லாத வியாதி!

என்று கூறுவதன்றி, வேறென்ன கூறமுடியும், தம்பி! அவர்படும் அல்லல் கண்டு உள்ளபடி பரிதாபப்படுகிறேன்.

அண்ணன்,



★

அந்திக்கலம்பகம்

மஞேன்மணிக்கு மனம் இங்கே தான் வட்டமிட்டபடி இருக்கும்; கல்கத்தாவிலேயே எங்கே இருக்க வேண்டி வருமோன்னு பயப்பட்டுக் கொண்டிருந்தா...

அவ மனசுபோலவே இங்கேயே அவளுக்கு ஒரு நல்ல இடம் கிடைச்சிருக்கே அதைச் சொல்லு. சம்பளம், கல்கத்தாவிலே அதிகமாக இருந்தாக்கூட, எப்படி நிம்மதியாக இருக்க முடியும்...

ஏன்! கல்கத்தா, பெரிய நகரம்; அங்கே வசதிக்கு என்ன குறை?

ஒண்ணும் தெரியாதவபோலப் பொன்னி பேசறதைக் கேள்டிபட்டு! பெரிய சீமையாவே இருக்கட்டும் கல்கத்தா; அதனுலே! நம்ம மக்க மனஷாளை விட்டுவிட்டு, அங்கே போய் இருக்க மனம் இடம்கொடுக்குமா...பொறந்த இடம் இது; சொந்த இடம்; கல்கத்தாவோ வேறே எதுவோ, அதெல்லாம் பிழைக்கப் போன இடம்தானே.

அதாவது, எத்தனை காலம் இருந்தாலும், அந்த இடமெல்லாம் நமக்கு வேற்று இடமாகத்தான் தோணும என்கிறிங்க. இல்லையா!

பட்டு! பொன்னி, எதையோ மனசிலே வைத்துக்கொண்டு குத்தலாப் பேசற மாதிரியாத் தெரியறது. பொன்னி! என்னத்துக்காக நீ இப்படிப் பேசுவதா இருந்தாலும்சரி, நம்ம ஊர், நம்ம மக்கள், நம்ம பழக்கவழக்கம், நம்ம பாஷை, நம்ம ஆசாரம் அனுஷ்டானம், என்பதிலே தான் நம்ம மனம் இழைந்து இருக்க முடியும்.

விளங்குது! விளங்குது! ஆனு இந்த விஷயம் சில பெரியவாளுக்கு விளங்கறதில்லை. அதனுலே தான் விவரம் கேட்டேன்.

ஆனு, பொன்னி! எனக்கு அந்தப் பக்கமெல்லாம் போய்ச் சுற்றிப் பாக்கணும்னு ஒரே ஆசை.

இருக்கும் இருக்கும்; அவன் அந்தப் பக்கத்திலேதானே இருந்திண்டிருக்கான்; உன்னுடை தம்பி. அதனுலேதான் பட்டுவுக்கு அந்த ஆசை.

போங்க, ஒவ்வொரு பேச்சையும் எடுத்துக் கொண்டுபோய், கேலியிலேயே முடிபோட்டு விடுகிறிங்க.

உன்னைக் கேலி செய்யறதிலே ஏமுவுக்கு எப்பவும் ஒரு சதோஷம்... அதனுலே என்ன...

சந்தோஷம்னு சொன்னதும் ஞாபகம் வந்தது; அவர் இருக்காரே, எங்களவர், அவர் சொல்லிண்டிருந்தார், இரண்டு நாளைக்குமுந்தி, தினசரி பேப்பரைக் கையிலே எடுத்தா

போதும், இருக்கிற சந்தோஷமெல்லாம் பறந்து போகுதுன்னு...

ஏன்! பேப்பர்லே, சந்தோஷம் கொடுக்கற விஷயம் நிறையவருதே! திருவிழாக்களைப்பற்றி, நாடகம் சினிமா இவைகளைப்பற்றியெல்லாம் பக்கம் பக்கமா வெளியிட்டிருக்கிறார்களே! படங்கள் போட்டிருக்கா.

அதெல்லாம் மனதுக்கு ஒருசில விநாடி சந்தோஷம் கொடுக்கும். அவர் சொல்றது, ஜனங்களுக்குத் தொல்லையும் துயரமும் தொடர்ந்து இருந்தபடி இருக்குது; எத்தனை சம்பாதித்தாலும் நிம்மதியான வாழ்க்கை வாழ முடிகிறதில்லே; பத்திரிகையிலே இந்த விஷயம் படிக்கறதாலே, மனமே குழம்பிப்போய் விடுது என்கிறார்.

பத்திரிகையிலே படிக்கிறதாலேயே, இவருக்கு மனம் குழம்பி விடுது, நாட்டை ஆள்கிறவர்கள், இந்தமாதிரி விஷயம் ஆயிரத்தெட்டு பார்த்தபடி இருந்தும், துளியாவது மனக்குழப்பம், சங்கடம் ஏற்படுதா· தைரியமாகவே பேசி இருக்கிறார்களே, ஆமாம்! கஷ்டந்தான்! சங்கடந்தான்! அதுக்கு என்ன செய்வது! பொறுத்துக்கொள்ள வேண்டியதுதான், என்று இப்படி எல்லாம்.

அவாளோட ஆட்சியிலே இப்படியெல்லாம் நடக்கறபோது அவா, மூடி மறைக்காம, மழுப்பிப் பேசாம, வேறெ என்ன செய்வா! தைரியமா இருக்கிறாளா, தைரியமா! அக்கரையத்து இருக்கிறான்னு சொல்லு...

ஏழு! நீ இப்படி சர்க்கார் கட்சியைக் கண்டிக்கணும் என்பதற்காகத்தான் பொன்னி பேச்சை இந்தமாதிரி திருப்பினது புரியுதா!

அவளுடைய வித்தை எதுவா இருந்தாலும்சரி; சர்க்கார் போக்கு சரியா இல்லேன்னா, கண்டிக்கக் கூடாதா, அந்த உரிமை இல்லையா நமக்கெல்லாம்! நாமெல்லாம் பார்த்துத்தானே ஓட்டுப்போட்டு சர்க்காரை நடத்தச்சொல்லி இவர்களை அனுப்பி வைக்கிறோம்.

இப்ப இதற்கு என்ன சொல்றே பட்டு! ஏழு கேட்பது நியாந்தானே. சர்க்காரைக் கண்டிக்கற உரிமை இல்லையா...சட்டப்படி தப்பா...

சர்க்கார் நினைச்சா, 124-வது செக்ஷன், அதாவது ராஜாங்கத துவேஷம், போட்டு வழக்குத் தொடுக்கலாம், தெரியுமா—ஏழு வருஷம் கடுங்காவல் தண்டனைகூட உண்டு...

போடுவாடி, போடுவா......124-ம் போடுவா, 241ம் போடுவா! எத்தனை நாளைக்குப் போடுவா...எத்தனைபேர் மீது போடுவா! போட்டபடி இருந்தா ஜனங்க பார்த்துக் கொண்டேதான் இருந்துவிடுவார்கள்போல இருக்கு. சரி, சரின்னு மனசிலே வைச்சிண்டிருந்து, தேர்தல் வருகிறபோது, 'ஓட்டு' கேட்க வருவாளேல்லோ, அப்ப திருஓட்டைத்தான் தூக்கித்தருவா, எடுத்துக்கொண்டு போகச் சொல்லி...

அடேயப்பா! என்னகோபம்வருது ஏழுவுக்கு!!

ஏன் வராது! நான் என்ன தமிழ் நாட்டுக்காரியில்லையா.........கேட்கலையோ கண்ணகி, தீர விசாரிக்காமலேயே, சரியான சாட்சி தேடாமலேயே, யாரோசொன்னதை அப்படியே நம்பி, என் புருஷனைத் திருடன் என்று சொல்லி கொலை செய்தயே, நீயும் ஒரு மன்னனா! உனக்கு முடி ஒரு கேடா! செங்கோல்வேறே உன் கையிலே இருக்கிறதா! என்றெல்லாம்...?......நானும் தமிழச்சி தானே......

பலே! பலே! கண்ணகிபடம், ஏழு மனதிலே அப்படியே படிஞ்சுபோயிருக்கே.

படம் இருக்கட்டும், அதிலே இருக்கிற பாடத்தை ஏழு இவ்வளவு திட்ட வட்டமா எடுத்துச் சொல்வதைக் கவனி பட்டு! இந்தவிதமான தெளிவும் தைரியமும், பெண்களுக்கு ஏற்பட்டா, அரசாங்கம் அக்கரையத்து இருக்கமுடியுமா! அச்சம்ஏற்படாதா.

பெண்கள்னா சாமான்யமா.........அவாளுக்கு ஓட்டு இருக்குது ஆமாம். அது எந்தப்பக்கம் விழறதோ அந்தப்பக்கந்தான் வெற்றி. ஆமாம்.

ஏழு! பெண்களுக்கு ஓட்டுஉரிமை வேணும் என்பதற்காக இங்கிலாந்து நாட்டிலே ஒரு போராட்டமே நடந்தது. தெரியுமா......

ஓட்டு உரிமைக்கா போராட்டம். ஏன்? இங்கே நமக்கெல்லாம் ஓட்டு உரிமையை தாராளமாக்கொடுத்தார்களே.

அது இந்தக்காலம். முன்னே இங்கிலாந்திலே, பெண்களுக்கு எதுக்கு ஓட்டு, அரசியல் காரியத்திலே பெண்களுக்கு என்னவேலை? என்று கேட்டு, ஆண்கள் பிடிவாதம் செய்தார்களே.

ஆமாமாம்! பெண்கள் கூட்டம் போட்டுப்பேசி, சட்டத்தை மீறி ஜெயிலுக்கெல்லாம் போயிருக்கா. படித்திருக்கிறேன்.

பொன்னி! எனக்குத் தெரியாது இந்த விஷயம். கொஞ்சம் சொல்லேன்.

எமிலைன் பான்கர்ஸ்ட் என்ற பெயர் கொண்ட மாதுதான் காரணம், இங்கிலாந்தில் பெண்கள் ஓட்டு உரிமை பெறுவதற்கு. இப்போது, பிரிட்டிஷ் பார்லிமென்ட் கட்டடம் இருக்கும் பக்கத்திலே அந்த அம்மையாரின் உருவச்சிலை வைத்திருக்கிறார்கள். ஆரம்பத்திலேயோ, பல கொடுமைகள் பாவம்! எத்தனையோ முறை போலீஸ் தாக்குதல், காலிக் கூட்டத்தால் தாக்குதல், சிறைவாசம்......

பெண்களுக்கு 'ஓட்டு' கொடு என்று கேட்டதற்காகவா?

ஆமாம்! பெண்கள் ஆடவருக்கு அடங்கி இருக்கவேண்டியதுதானே; ஆடவர்கள் அரசியலைப் பார்த்துக் கொள்கிறார்கள். இவர்கள் குடும்பத்தைப் பார்த்துக்கொண்டு குழந்தைகளைப் பெற்றுக்கொண்டு இருக்க வேண்டியதுதானே என்று ஒரு எண்ணம் ஆண்களுக்கு.

ஆனால் பொன்னி! ஓட்டு கொடு என்று கேட்டார்கள் என்று சாதாரணமாகச் சொல்கிறாயே, கொஞ்சமான 'ரகளை'யா அவர்கள் செய்தது?

பெண்கள் என்ன 'ரகளை, செய்ய முடியும் பட்டு!

பட்டு சொல்வது நிஜந்தான்; பலாத்காரமாகக்கூட நடந்து கொண்டார்கள். ஆனால் எப்போது? அவர்களால் கூடுமானமட்டும் அமைதியாக, மரியாதையாக, கண்ணியமாக, முறையிட்டுப் பார்த்தார்கள். பலிக்கவில்லை. பிறகு ஆத்திரம்! ஆத்திரத்துக்குச் சாத்திரம் ஏது! பலமான ரகளை, நடந்தது.

முதலிலே, இந்த மாதுக்கு-பெயர் என்ன?—பான்கர்ஸ்ட்டா — இந்த எண்ணம் எப்படி ஏற்பட்டது?

அறுபது வருஷத்துக்கு முந்திய இங்கிலாந்திலே, பெண்களின் நிலை, அடிமை நிலையாகத்தான் இருந்தது. பெண்களை, வேலைக்கு வைத்துக் கொள்ளமாட்டார்கள்; வேலையில் ஈடுபட்டாலும், ஆண்களுக்குத் தரு

கிற அளவு கூலியோ, சம்பளமோ தரமாட்டார்கள். படிக்க வசதி கிடையாது. பொது நிகழ்ச்சிகளிலே இடம் கிடையாது.

அடுப்பூதும் பெண்ணுக்குப் படிப்பு எதற்கு: என்று நம்மநாட்டு கர்நாட கங்கள் சொல்வதுபோல.

ஆமாம்! ஆனல், இங்கு இப் போதும் அப்படிப்பட்ட கர்நாடகம் இருக்கக் காண்கிருேம். இங்கிலாந் தில் 60-வருஷத்துக்கு முன்பு அப் படிப்பட்ட 'கர்நாடகம்' இருந்தது. உலகம் மெச்சும் தலைவரல்லவா சர்ச்சில்....தெரியுமல்லவா....வயது இப்போது 89.........

ஆமாம், பார்லிமெண்டிலே கூட போனவாரம் அவரைப் பாராட்டினுர் களாமே, பேப்பரில் பார்த்தேன்.

அதே சர்ச்சில், இந்தப் பெண்கள் இயக்கத்தை எதிர்த்தவர்தான்.

அப்படிப்பட்ட அறிவாளிகளெல் லாம் கூடவா, எதிர்த்தார்கள்.

அறிவாளிகள்கூட சில நம்பிக் கைகளை விட்டு விடச் சொன்னல், முரட்டுத்தனமாகத்தானே நடந்து கொள்கிருர்கள். ஆண்களின் இந்த மனப்போக்கை, பான்கர்ஸ்ட் பார்த் துப் பார்த்து மனம் புழுங்கிக் கிடந் தார்கள். அவருடைய கணவன் நல்லவர்; முற்போக்கான எண்ணம் கொண்டவர்.........

அப்படிச் சொல்லு, புருஷனுடை தைரியத்திலேதான் போராட்டம் துவக்கினுன்னு சொல்லு.

இல்லையே. பான்கர்ஸ்ட் பெண் களுக்கு ஓட்டு உரிமை தரவேண்டும் என்று போராடியபோது, விதவை, நாலு குழந்தைகளுக்குத் தாய். நடுத் தரக் குடும்பம். பாவம். ஆனல் எதை யும் பொருட்படுத்தாமல். ஓயாமல் பிரசாரம் செய்வது, பெண்களின் சங்கம் அமைப்பது, ஊர்வலம் நடத் துவது, மனு கொடுப்பது, முறை யிடுவது இப்படி இருபத்தைந்து வரு ஷங்கள் வேலை செய்து வந்தார்.

இருபத்தைந்து வருஷம் கேட்டும், ஆண்களுக்கு மனம் இளகவில்லை,

ஆமாம்! அத்தனை வருஷமும் அமைதியான முறைதான். பட்டு சொன்ன பலாத்காரம் தலைகாட்ட வில்லை. அரசியலை நடத்திக்கொண்டு வரும் ஆடவர்களோ நமது முறை யீட்டுக்குச் செவிசாய்க்கவில்லை; இப் படியே வீணுக்குக் கத்திக் கத்திச் சாக வேண்டியதுதானு......

என்று சலிப்பு, கோபம், ஆத்திரம் யாருக்கும் ஏற்படத்தான் செய்யும்...

அதே நிலைதான் ஏமு! சரி, மயிலே! மயிலே! இறகு போடு என்ருல் போடாது, இனி நாம் கொஞ்சம் தீவிரமாக நடவடிக்கை எடுத்தாக வேண்டும் என்று தீர்மா னித்தது, பெண்கள் இயக்கம்,

இயக்கமாகவே ஆகிவிட்டதா?

இருபத்தைந்து வருஷ உழைப்பு வீண் போகுமா? சர்க்கார்தான் அக்கறை காட்ட மறுத்தாலும்; மக்கள் மதிப்பளிக்காமலா இருப் பார்கள். பான்கர்ஸ்ட் கேட்பதிலே என்ன தவறு? அது நியாயந்தானே! பெண்களுக்கு ஓட்டு உரிமை கொடுத்தால் என்ன என்று, பெரிய இடத்துப் பெண்கள், படித்த பெண் கள் இவர்களெல்லாம் கூடக் கேட்க ஆரம்பித்தார்கள். ஏழைகள்திரண்டு நின்ருர்கள். வீட்டுக்கு வீடு போர் தான் போயேன்! தகப்பனுக்கும் மகளுக்கும் சண்டை. அண்ணன் தங்கைக்கு அமளி, புருஷன் மனை விக்குத் தகருரு......

இந்த ஓட்டு உரிமை வாங்கும் விஷயமாகவா?

ஆமாம்! காதலி! என்று கொஞ்ச வருகிருனல்லவா ஆடவன், அவனை அந்தப் பெண் பொன் கொடு பொருள் கொடு என்று கேட்கமாட் டாளாம். பெண்களுக்கு ஓட்டு உரிமை வாங்கித் தருவதற்கு ஒத்து ழைக்க வேண்டும்; ஒத்துழைப்ப தானல் உனக்கு என் இதயம் என்பாளாம்.

பாரேண்டி அந்தப் பெண்களோட சாமர்த்தியத்தை.

வேகமான வளர்ச்சி. பலம் பெருகிவிட்டது. சர்க்காரின் பிடி வாதம் குறையவில்லை ஓட்டு உரிமை கேட்டுப் பெண்கள் கூட்டம் போட்டால், கலகம் செய்வது, காட்டுக் கூச்சலிடுவது.

யார்? ஆண்களா! பெண்கள் தானே, பயந்துபோய் விடுவார்கள் என்ற எண்ணம்!

ஆமாம்! ஆனல் பெண்கள் பயப் படவில்லை, நியாயமாகக் கேட்டுப் பார்த்தோம், நியாயம் கிடைக்க வில்லை, இனி அமளி செய்தால்தான் நியாயம் கிடைக்கும் என்று முடிவு செய்தார்கள். பிறகுதான், இவர் களும் கூச்சலிடுவது, கலகம் செய் வது கல் வீசுவது, வீடுகளின்மீது படை எடுப்பது, சர்க்கார் தலைவர் களை வழி மறிப்பது, அவர்களின்

கூட்டங்களைக் கலைப்பது; பார்லி மெண்ட்டுக்குள் படை எடுப்பது இப்படி ஆரம்பித்து விட்டார்கள்.

பெண்களே இப்படிச் செய்தார் கள் என்ருல், முதலில் அவர்களை ஆடவர்கள் அவ்வளவு கொடுமை செய்திருக்க வேண்டும், இல்லையா!

ஆமாம் — கொடுமை நிரையத் தான். போலீஸ் தடியடி—கோர்ட் டிலே வழக்கு—சிறை.

பான்கர்ஸ்ட்டுக்குச் சிறைத் தண் டனையா?

அந்த அம்மா மட்டுமல்ல, அவர்க ளுடைய இரண்டு பெண்களுக்கும். பல பெண்களுக்குச் சிறை. பார்லி மெண்ட் பக்கத்திலே. பெண்கள் மறியல். மறியல் செய்பவர்களைப் போலீஸ் பிடித்து இழுத்துக் கொண்டு போவார்கள். அதைத் தடுக்க இந்தப் பெண்கள் இரும்புச் சங்கிலி எடுத்துக் கொண்டு போய், தாங்களாகவே, மறியல் செய்யும் இடத்தில், தங்களைப் பிணைத்துக் கொள்வார்கள்......

என்ன ஆனுலும் ஆகட்டும் என்ற அளவுக்கு ஒரு துணிச்சல் ஏற்பட்டுவிட்டது.

எப்படி ஏற்படாமல் இருக்க முடி யும். சிறையிலே போயும் சும்மா இருந்தார்களா! அங்கே உண்ணு விரதம்!

உண்ணுவிரதம் அவர்கள் கூடவா ......இங்கேதானே அந்த முறை...

இங்கே இப்போது வந்தது அந்த முறை. அறுபது வருஷத்திற்கு முன்பே, உண்ணுவிரதம் இருந்தார் கள் இந்தப் பெண்கள் இங்கிலாந் தில், வலுக்கட்டாயப் படுத்தி. ரப்பர் குழாய் வழியாக உணவைச் செலுத் துவார்கள் — இவர்கள் மறுப்பார் கள்......

பாவம், உடம்புக்கு ஏதாகிலும் ஆகிவிட்டதா...

ஆகாமலிருக்குமா! களைப்பு, இளைப்பு, மயக்கம், எல்லாம்தான். அந்த நிலை வந்ததும் விடுதலை செய்துவிடுவார்கள்; மீண்டும் உடம்பு சரியானதும் சிறைக்குக் கொண்டுபோவார்கள். அதற்காக ஒரு தனி சட்டமேகூடப் போட்டார் கள்.

சர்க்காருக்கு முடிகிறது ஆயிரத் தெட்டு வழி கண்டுபிடிக்க...

இவர்கள், சர்க்காருக்குச் சளைத் தவர்களா! இவர்களும் பல வழி களைக் கையாண்டார்கள். ஒருமுறை அரச குடும்பத்தார் ஒரு நாடகம்

(16-ம் பக்கம் பார்க்க)

கூ-கிளக்ஸ்-கிளான்

உலகம் மெச்சிட அரசோச்சி சாதகன் ஒருவனால் படுகொலை செய்யப்பட்ட அமெரிக்கக் குடிஅரசுத் தலைவர் கென்னடி அமெரிக்காவில் நீக்ரோக்களுக்கு இழைக்கப்பட்டு வரும் இழிவுகளைத் துடைத்திட கொடுமைகளை ஒழித்திட, நிறவெறியை அறவே போக்கிட உழைத்துவந்தார். நிறவெறிகொண்டவர்களின் சதி காரணமாகவே கென்னடி கொல்லப்பட்டார் என்றும் ரவலாகப் பேசிக் கொள்ளப்படுகிறது. அவர் மறைந்தார் எனினும் அவர் துவக்கிவைத்த மாபெரும் துப்புரவு இயக்கம் மடியவில்லை, மாறாக புது வலிவுடன் வளர்ந்திருக்கிறது. இப்போது தலைவராக உள்ள ஜான்சன் கென்னடியின் கொள்கையை நிறைவேற்றும் நோக்குடன் நீக்ரோக்களுக்கு சமஉரிமை வழங்கப்பட்டாக வேண்டும் என்பதற்கான சட்டம் கொண்டுவந்து நிறைவேற்றினார். இது, நிறவெறி கொண்ட வெள்ளையருக்கு ஆத்திரத்தை மூட்டிவிட்டது. சட்டத்தை மதிக்க மறுத்து, பலாத்காரம் தலைவிரித்தாடச் செய்து நீக்ரோ மக்களைப் பணியவைக்கலாம் என்ற நினைப்புடன் திட்டமிட்டுச் செயலாற்றுகின்றனர்.



கென்னடி.

இதன் விளைவாகவே, அமெரிக்காவில், நீக்ரோக்களுக்கும் வெள்ளை வெறியர்களுக்கும் கலகம், மூண்டுவிட்டிருக்கிறது.

வெறிகொண்ட வெள்ளையர்களை எதிர்த்தடிக்க நீக்ரோக்கள் முனைந்து நிற்கின்றனர். 'ஆர்லாம்' எனும் பகுதி, நீக்ரோ பாட்டாளிகள் இருக்கும் குடிசைப் பிரதேசம். இங்கு, நடமாடும் வெள்ளையர் பிணமாக்கப்படுகின்றனர். சுட்டால் சாகவேண்டும், அடித்தால் ஓடவேண்டும், மிரட்டினால் பணிய வேண்டும் என்பது, வெள்ளை வெறியர்கள் நீக்ரோக்களுக்கு இடும் கட்டளை. இதற்கு அடங்கி ஒடுங்கி எத்தனை காலத்துக்கு நீக்ரோக்கள் இருந்திட முடியும். இப்போது எதிர்த்து நிற்கிறார்கள்.

சம உரிமைச் சட்டத்தைச் சாகடிக்கக் கிளம்பியுள்ள வெள்ளை வெறியரை அடக்கிடும்ஆற்றலுடன் ஜான்சன் இருக்கிறார்.

என்றாலும், நிறவெறியர்கள், தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டிவிட, மூர்க்கத்தனமான கொடுமைகளைச் செய்திடத் தயங்கமாட்டார்கள்.

கூ-கிளக்ஸ்-கிளான் இந்த நிறவெறியர்களின் கொடுமைச் செயல் எந்த அளவு செல்லக்கூடும் என்டதை எடுத்துக் காட்டுகிறது.

கூ - கிளக்ஸ் - கிளான் என்பது கொலைக்கஞ்சாக் கொடியவர்களின் கூடாரம்—வெள்ளை வெறியர்களின் இரகசியப் பாசறை.

தீ மூட்டுதல், மரத்தில் தூக்கிடுதல், கற்பழித்தல், கொள்ளையடித்தல், சித்திரவதை செய்தல், வெட்டுப் போடுவது, சுட்டுத் தள்ளுவது—இவை கூ-கிளக்ஸ்-கிளான் கையாளும் முறைகள்.

இந்த பயங்கர ஸ்தாபனத்திலே சேர்ந்திடும்வெள்ளையர்கள், வெள்ளை உடை அணிந்து, முகமூடி போட்டுக் கொண்டு, இரகசியமாக வேலை செய்வார்கள், திடீரெனப் பாய்வார்கள் தாக்குவார்கள்! நீக்ரோக்களை இழுத்துக்கொண்டு போய், நெருப்பு மூட்டி அதிலே தள்ளுவார்கள்—அடித்துக் கொல்லுவார்கள். சாகடிக்கப்பட்ட நீக்ரோவை, விளக்குக் கம்பத்தில் மாட்டித் தொங்கவிடுவார்கள்—உரிமை கேட்டவன் ஊசலாடுகிறான் என்று கொக்கரிப்பார்கள்.

இந்தப் பயங்கர ஸ்தாபனமான கூ-கிளக்ஸ்-கிளானில், யாரார் உறுப்பினர்கள், அவர்கள் எங்கெங்கே இருக்கிறார்கள் என்பது யாருக்கும் தெரியும். கூ-கிளக்ஸ்-கிளானில் சேருபவர்கள், சபதம் எடுத்துக் கொள்கிறார்கள், இரகசி

கூ-கிளக்ஸ்-கிளான்.

யத்தை, உயிர் போவதானாலும் வெளியிடுவதில்லை என்று-

கென்னடி துவக்கி, ஜான்சனால் நிறைவேற்றி வைக்கப்பட்ட உரி



ஜான்சன்.

மைச் சட்டத்தைத் துணைகொண்டு நீக்ரோக்கள்—உரிமை பெற முனைந்தால், கூ-கிளக்ஸ்-கிளான், நீக்ரோக்களை அழித்திடக் கிளம்பும் என்று அச்சுறுத்தல் எழும்பிவிட்டிருக்கிறது.

கூ-கிளக்ஸ்-கிளான் அமெரிக்காவின் நல்லறிவாளர்கள் நீக்ரோக்களுக்காகப் பரிந்து பேச ஆரம்பித்த நாட்களிலேயே, அமைக்கப்பட்டுவிட்டது.

1865-ல், டென்னசி பகுதியில், புலாஸ்கி எனும் இடத்தில் தளபதி பாரஸ்ட் என்பானுடைய தலைமையில் இந்த பயங்கர இயக்கம் துவக்கப்பட்டது. இதனுடைய பேயாட்டத்தை ஒடுக்க, சர்க்கார் மிகத் தீவிரமான முறையிலே பாடுபட்டும் சமாளிக்க முடியவில்லை—ஏனெனில் போலீஸ், ராணுவம் போன்ற துறைகளிலேயே, வெள்ளை வெறியர்கள் இருந்துவந்ததால், அவர்கள் கூ-கிளக்ஸ்-கிளான் ஆட்களுக்கு மறைமுகமாகப் பரிவு காட்டி வந்தனர்.

1871-ல், கூ-கிளக்ஸ்-கிளான், தடை செய்யப்பட்டது—சட்டம் பிறந்ததால்.

ஆனால், நீக்ரோ மக்கள் உரிமைக்காகக் கிளர்ச்சி ஏதும் செய்யாதிருக்கும் வரையில், கூ-கிளக்ஸ்-கிளான் ஓய்ந்திருந்தது—நீக்ரோக்கள் உரிமை கேட்க ஆரம்பித்ததும், மீண்டும் தலை தூக்கிற்று.

1915-ம் ஆண்டிலிருந்து கூ-கிளக்ஸ்-கிளான் வெறியாட்டம் போடத்தலைப்பட்டது.

ஒரு பல்கலைக் கழகத்தில் சரித்திரப் பேராசிரியராக இருந்துவந்த வெள்ளையர் ஒருவர் வெறி பிடித்தவராகி, கூ-கிளக்ஸ்-கிளானை நடத்திச் செல்ல முனைந்தார். இந்த பயங்கர இயக்கத்தை ஒழித்துக் கட்ட 1920-ல், அமெரிக்க ஆட்சிமன்றம் ஒரு குழு அமைத்தது. ஒரு தகவலும் திரட்ட முடியவில்லை; ஒருவிதமான துப்பும் கிடைக்கவில்லை; கூ-கிளக்ஸ்-கிளான் ஆட்கள் பிடிபடவில்லை.

இப்போது மீண்டும் இந்தக்கொலை பாதகர்கள் கிளம்பி நீக்ரோக்களை



கோல்ட் வாடர்.

வேட்டையாடக்கூடும் என்ற அச்சம் மிகப் பலமாக எழும்பிவிட்டிருக்கிறது.

ஜான்சன் சர்க்கார் விழிப்புடன் இருந்தாலொழிய, இந்த நிறவெறியரின் கொட்டத்தை அடக்குவது முடியாததாகி விடும்.

ஜான்சன் சர்க்கார், நீக்ரோக்கள் உரிமை பெற்று வாழ்வதற்காக எடுத்துக்கொள்ளும் சீரிய முயற்சிகளை, உலக நல்லறிவாளர்கள் பாராட்டுவர். துணிந்து பணியாற்றி வெற்றி பெற, ஜான்சன் விழைகிறார். இவரை, எப்படியும் தேர்தலில் தோற்கடித்துவிட வேண்டுமென, தோள் தட்டிக்கொண்டு கிளம்புகிறார், கோல்ட் வாடர் என்பவர்.

கோல்ட்வாடர், எத்தகைய வெறி உணர்ச்சிகொண்டவர் என்பதை மறைத்துக்கொள்ளக்கூட இல்லை—வெளிப்படையாகவே கூவிக்கொண்டிருக்கிறார்.

நீக்ரோ மக்களுக்கு உரிமை அவசியமில்லை, அவசரமுமில்லை என்று பேசுகிறார்.

நிறவெறி கொண்டலையும் தெற்குப் பகுதியில், ஓட்டுகள் தமக்குக் குவியும் என்று எதிர்பார்த்து, ஜான்சனை எதிர்த்து நிற்கிறார்.

நிறவெறி மட்டுமல்லாமல், கோல்ட்வாடர் போர்வெறி கொண்டும் கொக்கரிக்கிறார்.

எப்படியும் கம்யூனிஸ்டு ரஷியாவுடன் போரிட்டாகவேண்டும்—ஒரு கை பார்த்துவிடவேண்டும் என்று துடிக்கிறார்.

சோவியத்பெருந்தலைவர் குருஷாவ் உலகம் பெரும்போரால் அழியக்கூடாதே என்ற பொறுப்புணர்ச்சியுடன், நடந்துகொள்வதை உலகின் அறிவாளர்கள் பாராட்டுகிறார்கள். எந்தப்போரிலும் ஈடுபடத்தக்க வல்லமையைக் குவித்துவைத்துக் கொண்டிருக்கும் குருஷாவ், போர் என்பது விளையாட்டு அல்ல, இம்முறை போர் ஏற்பட்டால், பிறகு உலகம், காடாகிப்போகும் என்பதை எடுத்துச்சொல்லி, வல்லரசுகளின் போர்வெறியைக் குறைத்திட முனைகிறார். பிரச்சினைகளைப் பேசித் தீர்த்துக்கொள்ளவேண்டும்

குருஷாவ்.

என்ற பெருநெறியைக் கடைப்பிடிக்கிறார்.

அவருடைய இந்தச் சீலம் கென்னடியின் மனதுக்கு மிகவும் பிடித்

திருந்தது. இருதலைவர்களும் கூடி, உலகில் போர் மூண்டிடாமல் பார்த்துக்கொண்டனர்.

அத்தகைய குருஷாவ்மீது பாய்கிருர் கோல்ட்வாடர்.

அவருக்கு அளிக்கப்படும் ஓட்டு, நிறவெறிக்கும் உலக அழிவுக்கும் அளிக்கப்படும் ஓட்டாகும் என்பதைத் தெளிவுள்ள அமெரிக்கர்கள் உணர்ந்துகொள்ளாமலில்லை.

கூ–கிளக்ஸ்–கிளான், கோல்ட்வாடருக்காகத்தான் வேலைசெய்யும்.

கூ–கிளக்ஸ்–கிளானுடைய கோரப்பிடியில் அமெரிக்கா சிக்காதிருக்க வேண்டுமானுல், ஜான்சன் வெற்றி பெற்ருகவேண்டும்.

ஜான்சனே வெற்றிபெறுவார் என்று, அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஜான்சன் மீண்டும் அமெரிக்கக் குடிரசுத் தலைவராக வந்தால்தான், கென்னடியால்வகுக்கப்பட்டு, ஜான்சனுல் நிறைவேற்றப்பட்டுவரும் திட்டப்படி, அமெரிக்க உதவி இந்தியாவுக்குத் தொடர்ந்து தகுந்த அளவில் கிடைத்துவரும்.

கோல்ட் வாடர் அமெரிக்கா, இந்தியாவுக்குக் கண்ணை மூடிக்கொண்டு, பணம் கொடுத்துவருவதாக அங்கலாய்த்துக்கொள்பவர். எனவே அவர் வெற்றிபெற்ருல் இந்தியாவுக்குப்பணஉதவி, பொருள் உதவி தருவது, கெட்டுப்போய் விடக்கூடும்.

கென்னடியின் திட்டப்படி, அமெரிக்கா, இந்தியாவின் நிலைமை

செஸ்டர் பவுல்ஸ்.

களிலே சிக்கல் ஏற்படும்போதெல்லாம், மிக மனமுவந்து உதவி அளித்து வருவதைக் காண்கிறோம்.

உணவுப் பிரச்சினை ஒரு நெருக்கடியை உண்டாக்கிவிட்டிருக்கும் இந்த நேரத்தில், அமெரிக்கா, கோதுமையும், அரிசியும் மிகப் பெரிய அளவில் கொடுத்துதவ முன் வந்திருக்கிறது.

செஸ்டர் பவுல்ஸ் கூறியுள்ளபடி, மொத்தத்தில் உணவுத் தானியம், 15-இலட்சம் டன்—நாள்தோறும் பத்தாயிரம் டன் தானியமுள்ள கப்பல்கள் இரண்டு–மூன்று மாதங்களில் தரப்படும், பிறகும் தரப்படும்—மொத்தத்தில் 40-இலட்சம் டன் தரப்படும்—கோதுமையும் அரிசியும்.

இப்போது அமெரிக்கா சென்றுள்ள முன்னுள் உணவு விவசாய மந்திரி படீலும், ஜான்சனைக் கண்டு பேசி, அங்கு காட்டப்படும் கனிவு பற்றி மகிழ்ச்சி தெரிவித்திருக்கிருர்.

இந்த நேசத்தொடர்பை கோல்ட்வாடர் பாழக்கிவிட விரும்புகிருர். இவர்போன்ருர் கொண்டுள்ள மனப்போக்கின் காரணமாக எழும்பியதுதான், வெள்ளை அங்கியால் உடலை மறைத்துக்கொண்டு, வெறிபிடித்தலைந்து, படுகொலையை பயங்கரத்தைச் செய்துவரும், கூ–கிளக்ஸ்–கிளான். ●

13-ம் பக்கத் தொடர்ச்சி

பார்க்க வந்தார்களாம். இந்த இயக்கப் பெண்கள் சிலபேர் நாடகம் பார்க்கப் போகிறவர்கள்போலச் சென்று, ஒரு பிரசங்கமே நடத்தி விட்டார்களே சர்க்காரின் கொடுமைகளைப்பற்றி.

பலே! பலே! அப்படித்தான் செய்யவேண்டும்.

சர்க்காருக்கே இனிப் பிடிவாதம் செய்யக்கூடாது என்ற எண்ணம் கொஞ்சம் கொஞ்சமாக வந்து கொண்டிருந்தது. அந்தச் சமயத்தில், இங்கிலாந்துக்கும் ஜெர்மனிக்கும் சண்டை மூண்டுவிட்டது...

ஓஹோ! அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு பெரிய ரகளை செய்து வெற்றிபெற்ருர்களா பெண்கள் இயக்கத்தார்.

அதுதான் இல்லை. அது கீழ்த்தரமான முறை என்று பான்கர்ஸ்ட் எண்ணினுர். நாட்டுக்கே ஆபத்து ஜெர்மனியால். இந்த நேரத்தில் ஓட்டுக்காகக் கிளர்ச்சி செய்து குழப்பம் உண்டாக்கி, நாட்டு பலத்தைப் பாழாக்கக்கூடாது என்று அறிவித்தார்.

எவ்வளவு பெருந்தன்மை, எத்தகைய நாட்டுப்பற்று! நேர்மை,

யுத்தத்தில் ஒத்துழைப்பு தருவது என்றும் முடிவு செய்து ஒத்துழைத்தார்கள்.

பொறுப்பற்றவர்கள் அல்ல நாங்கள் என்பதை எடுத்துக்காட்டினுர்கள். பெண்குலத்தின் பெருமையை விளக்கிவைத்தார்கள்.

யுத்தம் முடிந்தது. இங்கிலாந்து வெற்றிபெற்றது. 1918-ம் ஆண்டு பிப்ரவரியில், பெண்களுக்கு ஓட்டு உரிமை தருவது என்று பார்லிமெண்ட் சட்டம் செய்தது.

ஒரு பெண்மணியின் ஓயாத உழைப்பு, தளராத ஊக்கம்...

தியாகம், இவற்ருலே ஓட்டு உரிமை பெண்களுக்கு இங்கிலாந்திலே கிடைத்தது.

இவ்வளவு அருமையான ஓட்டு என்று தெரியாமல், நம் நாட்டு பெண்கள், எது எதற்கோ செவி சாய்த்து ஓட்டுகளைப் பாழ்படுத்திக் கொள்கிருர்களே......இதை நினைத்துப் பார்க்கும்போது, எவ்வளவு மனச்சங்கடமாக இருக்கு தெரியுமா பொன்னி!

எனக்கும் உனக்கும் தெரிந்து என்ன புண்யம் ஏழு! ஊருக்குத் தெரிய வேண்டுமே. அப்போது தானே உருப்படியான பலன் கிடைக்கும்.

ஏழு! எழுந்திரு. உங்களவர் வருகிருர்போல இருக்கு...

அட, ஆமாம்...அப்ப பொன்னி, பட்டு, நீங்க...

நாங்க நந்திபோல குறுக்கே நிற்பமா! போயிட்டுவாரோம்......

*

சின்ன காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "அல்லி" அச்சகத்தில், (உரிமையாளர்) சி. என். ஏ. இளங்கோவனுல் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணுதுரை.